StudentBounty.com

Register Number

**Part III**

# வணிகவியல் / COMMERCE

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

*குறிப்பு :* **அனைத்து** வினாக்களுக்கும் விடையளி. 40 × 1 = 40

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக :

1. பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ள அமைப்பு

அ) தனி வணிகர்

ஆ) கூட்டாண்மை

இ) கூட்டுப்பங்கு நிறுமம்.

2. தனியாள் வணிகத்தில்

அ) வியாபார இரகசியங்களைக் காக்க இயலாது

ஆ) வியாபார இரகசியங்களைக் காக்க இயலும்

இ) இரண்டுமில்லை.

3. கூட்டாண்மையின் அடிப்படைக் கூறு

அ) பூரண நல்ல நம்பிக்கை

ஆ) முதலீட்டிற்கான தொகை இருத்தல்

இ) கூடி தொழில் செய்ய விருப்பம்.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

4. கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்தல்

அ) 1949 சட்டம்

ஆ) 1956 சட்டம்

இ) 1932 சட்டம்.

5. கூட்டாண்மையில் தோன்றும் உறவு முறை

அ) முதல்வர் மற்றும் முகவர்

ஆ) உரிமையர் மற்றும் வேலையாளர்

இ) எஜமானர் மற்றும் பணியாளர்.

6. இந்தியாவில் கூட்டாண்மை உடன்பாடு .................... இருக்கலாம்.

அ) பேச்சளவிலோ

ஆ) எழுத்து வடிவத்திலோ

இ) பேச்சளவிலோ அல்லது எழுத்து வடிவத்திலோ.

7. கீழ்க்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்ட மன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது ?

அ) பட்டய ( சாசன ) நிறுமம்

ஆ) அயல்நாட்டு நிறுமம்

இ) அரசு நிறுமம்

ஈ) சட்டமுறை நிறுமம்.

8. கீழ்க்கண்ட சூழ்நிலைகளுள் எப்பொழுது கடனீட்டுப் பத்திரதாரர்கள் வட்டி பெறும் உரிமை பெற்றுள்ளனர் ?

அ) நிறுமம் இலாபம் ஈட்டும் போது மட்டும்

ஆ) பங்குநர்கள் பங்காதாயம் பெறும் போது

இ) நட்டம் ஏற்படும் ஆண்டு உட்பட எந்த ஆண்டிலும்

ஈ) மேற்சொன்ன அனைத்து சூழ்நிலைகளிலும்.

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

9. தகவலறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறைந்தளவு பங்கெடுப்பைக் கீழ்க்க நாட்களுக்குள் ஒரு நிறுமம் பெற வேண்டும்.

அ) 90 நாட்கள் ஆ) 120 நாட்கள்

இ) 130 நாட்கள் ஈ) 60 நாட்கள்.

10. ஒரு பொது வரையறு நிறுமம் தனது கடனீட்டுப் பத்திரங்களை வாங்குமாறு பொதுமக்களிடம் அழைப்பு விடும் விளம்பரத்திற்குப் பெயர் .................... .

அ) அமைப்பு முறையேடு ஆ) செயல்முறை விதிகள்

இ) தகவலறிக்கை ஈ) அட்டவணை 'அ'.

11. .................... எண்ணிக்கைக்கு மிகாது பொது வரையறு நிறுமங்களில் ஒரே நேரத்தில் ஒரு நபர் இயக்குநர் பதவி வகிக்கலாம்.

அ) 10 ஆ) 15

இ) 20 ஈ) வரம்பில்லை.

12. நிறுமச் செயலர் ஒருவர் .................... நியமிக்கப்படுகிறார்.

அ) அரசால்

ஆ) இந்திய நிறுமச் செயலர்கள் அமைப்பால்

இ) இயக்குநர் அவையால்

ஈ) ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பங்குநர்களால்.

13. நிறுமக் கூட்டத்தில் நேரிடையாகக் கலந்து கொள்ள வேண்டிய குறைந்தளவு உறுப்பினர்களது எண்ணிக்கை .................... ஆகும்.

அ) பகராள்

ஆ) குறைவெண்

இ) நிகழ்ச்சி நிரல்.

14. பங்கு மாற்றகங்கள் பங்குகளின் ஊக வாணிகத்தை ....................

அ) அனுமதிப்பதில்லை ஆ) ஊக்கப்படுத்துவதில்லை

இ) ஊக்கப்படுத்துகிறது ஈ) தடை செய்யும்.

[ Turn over

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



15. தன் வணிகர்கள் பங்கு மாற்றகங்களில் இவர்களுக்கான வாணிகத்தில் ஈடுபடுகிறார்கள்.

அ) வாடிக்கையாளர்களுக்காக

ஆ) தங்களுடைய சொந்த நடவடிக்கைகளுக்காக

இ) மற்ற தரகர்களுக்காக

ஈ) மற்ற உறுப்பினர்களுக்காக.

16. எச்சரிக்கையான ஊக வணிகர் .................... எனப்படுவார்.

அ) கலைமான் ஆ) காளை

இ) முடவாத்து ஈ) கரடி.

17. கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களின் உச்ச அளவு

அ) 50 ஆ) 60

இ) 100 ஈ) வரையறை இல்லை.

18. கூட்டுறவில் பங்காதாயம் .................... அடிப்படையில் உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

அ) பங்குமுதல் ஆ) பங்குகள் வாங்கிய எண்ணிக்கையில்

இ) ஆதரவின் அடிப்படையில் ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

19. அரசு நிறுமம் இவற்றின் கீழ் பதிவு செய்யப்படுகிறது

அ) மைய அல்லது மாநில அரசின் தனிச் சட்டம்

ஆ) இந்திய நிறுமச் சட்டம் 1956

இ) அரசாணை

ஈ) அரசியல் அமைப்பு சாசனம்.

20. அரசுத் தொழில்கள் மிகச் செம்மையாக இயங்குவதற்கு மிகவும் உகந்தது என பொதுவாகக் கருதப்படும் அமைப்பு .................... .

அ) துறைவாரி அமைப்பு

ஆ) பொதுக்கழகம்

இ) அரசு நிறுமம்

ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

21. ஒரு நிறுமம் என்பது ...................... கருதப்படுகிறது.

22. தொலைதூர ஒலிபரப்பு ...................... அமைப்பின் கீழ் வருகிறது.

23. தனியாள் வாணிகரின் பொறுப்பு ...................... .

24. தனியாள் வாணிகத்தைத் துவங்க ...................... முதலே போதுமானது.

25. வங்கித் தொழில் அல்லாத பிற தொழில்களுக்கு அதிகபட்ச உறுப்பினர்களது எண்ணிக்கை ...................... .

26. ...................... என்பது ஒரு குறிப்பிட்ட வணிக செயல் அல்லது வேலையை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்துக் கொடுக்க உருவாக்கப்பட்ட ஒரு தற்காலிக கூட்டாண்மையாகும்.

27. கூட்டாண்மையைப் பதிவு செய்ய வேண்டியது ...................... இல்லை.

28. ஒரு நிறுமத்தின் அக மேலாண்மை குறித்த விவரங்கள் அடங்கியிருப்பது ...................... .

29. ஒரு தனி வரையறு நிறுமத்தில் குறைந்தது ...................... இயக்குநர்களாவது இருக்க வேண்டும்.

30. நிறுமச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை A என்பது ...................... ன் மாதிரி ஆகும்.

31. பங்குநர்கள் நிறுமத்தின் உண்மையான ...................... .

32. பங்குநர் ஒருவருக்குப் பதிலாகக் கூட்டத்தில் கலந்து கொள்ள நியமிக்கப்படும் நபர் ...................... என அழைக்கப்படுகிறார்.

33. கூட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் வரிசையே ...................... என கூறப்படுகிறது.

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



34. பங்குகள் ...................... உரிமையைக் குறிக்கும்.

35. விண்ணப்பத்தொகை ஒரு பங்கின் முக மதிப்பில் ...................... சதவீதத்திற்கு குறைவாக இருக்கக் கூடாது.

36. ஆரம்ப பொது வெளியீட்டிற்கு மாற்றாக ...................... இருக்கின்றன.

37. கூட்டுறவு சங்கத்தின் மேலாண்மை ...................... கொண்டது.

38. ஒவ்வொருவரும் அனைவருக்காக அனைவரும் ஒவ்வொருவருக்காக என்பது...................... ன் குறிக்கோளாகும்.

39. இராணுவப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்ற தொழிலமைப்பு ...................... அமைப்பேயாகும்.

40. அரசு நிறுமத்தில் குறைந்தபட்சம் ...................... பங்குகளை அரசு வைத்திருக்கும்.

## பகுதி - ஆ

*குறிப்புகள் :* i) ஏதேனும் **பத்து** வினாக்களுக்கு விடையளிக்க.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் *நான்கு வரிகளுக்கு* மிகாமல் விடையளிக்க.

$10 \times 4 = 40$

41. அமைப்பு என்ற சொல்லை வரையறு.

42. அதிகார ஒப்படைவு என்பதன் பொருள் யாது ?

43. தனியாள் வாணிக அமைப்பு என்றால் என்ன ?

44. கூட்டாளிகளிடையே நிலவும் உறவு முறை யாது ?

45. இளவர் என்பவர் யார் ? ஒரு இளவர் கூட்டாளியாக இருக்க முடியுமா ?

46. வரையறு பொறுப்பு என்றால் என்ன ?

47. மீள்தரு முன்னுரிமைப் பங்குகள் பற்றி குறிப்பு வரைக.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

48. ஒரு பொது வரையறு நிறுமத்தில் இயக்குநர் நியமிக்கப்படும் முறைகளைக் கூறு.

49. நிறுமத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் வழக்கமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை ?

50. ஊக வணிகர் எனப்படுபவர் யார் ?

51. இரண்டாம் நிலைச் சந்தை என்றால் என்ன ?

52. நுகர்வோர் கூட்டுறவின் பொருளை விளக்கு.

53. ஒருநபர் ஒரு வாக்கு என்பதன் பொருள் யாது ?

54. அரசுத் தொழில்களை எவ்வகையில் உருவாக்கலாம் ?

55. பொதுக்கழகத்தின் மேலாண்மை பற்றிக் குறிப்பிடுக.

## பகுதி - இ

*குறிப்புகள் :* i) ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொன்றிற்கும் *ஒரு பக்க* அளவிற்கு மிகாது விடையளி. $5 \times 8 = 40$

56. இந்துக் கூட்டுக் குடும்ப வணிகம் பற்றி குறிப்பு வரைக.

57. ஒரு கூட்டாண்மை நிறுவனத்தைப் பதிவு செய்யாமையால் ஏற்படும் குறைபாடுகள் யாவை ?

58. அமைப்பு முறையேடு என்றால் என்ன ? அதில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை ?

59. முறைகேடான ஒதுக்கீடு குறித்து குறிப்பு வரைக.

60. நிறுமத்தின் மேலாண்மை ஊதியம் குறித்து விளக்கம் தருக.

61. போல்ட் எவ்வாறு செயல்படுகிறது ? அதன் ஆற்றல்கள் யாவை ?

62. கூட்டுறவு சங்கத்திற்கும், கூட்டுப்பங்கு நிறுமத்திற்கும் உள்ள வேறுபாடுகளில் எட்டினை மட்டும் எழுது.

63. அரசு நிறுமத்தின் இயல்புகள் யாவை ?

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

## பகுதி - ஈ

குறிப்புகள் : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

ii) ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்க அளவிற்கு மிகாது விடையளி.

$4 \times 20 = 80$

64. ஏதேனும் ஐந்து வகையான தொழில் வடிவமைப்புகளைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

*அல்லது*

துறைமுறை அமைப்பின் இயல்புகளையும், நிறை குறைகளையும் விளக்கி எழுது.

65. சமுதாயத்தில் தனி வாணிகரின் பங்கினை விவரி.

*அல்லது*

பங்குகளுக்கும், கடனீட்டுப் பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாட்டினை தருக.

66. கூட்டாண்மை நிறுவனத்தின் ஏதேனும் ஐந்து நன்மைகளையும், ஐந்து குறைபாடுகளையும் விளக்கி எழுது.

*அல்லது*

பங்கு மாற்றகத்தின் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் யாவை ?

67. ஒரு நிறுமச் செயலரின் பணிகளும், கடமைகளும் யாது ?

*அல்லது*

கூட்டுறவு சங்கத்தின் ஏதேனும் ஐந்து நன்மைகள் மற்றும் ஐந்து தீமைகளை விளக்கு.

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers